**ஏப்ரல் – 29**

# TNPSC துளிகள்

- ஆங்கிலம், தமிழ் மற்றும் கணிதம் ஆகியவற்றில் மாணவர்களின் கல்வித் திறனை அதிகரிப்பதற்காக தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையானது விரைவில் 'திறன்' என்ற முன்னெடுப்பினை அமல்படுத்தவுள்ளது.
- இந்தியத் தனித்துவமான அடையாள ஆணையத்தின் (UIDAI) தலைமை நிர்வாக அதிகாரியாக (CEO) புவனேஷ் குமார் பொறுப்பேற்றுள்ளார்.
- சீனாவின் 10வது ஆண்டு விண்வெளி தினத்தை முன்னிட்டு, டியாங்காங் விண்வெளி நிலையத்திற்கு மூன்று விண்வெளி வீரர்களை ஏற்றிச் செல்லும் ஷென்சோ-20 ஏவுகலத் திட்டத்தினை சீனா தொடங்கியுள்ளது.
- 2,100 கோடி ரூபாய் மதிப்பிலான பிரதான் மந்திரி மாபெரும் ஒருங்கிணைந்த ஜவுளிப் பிராந்தியம் மற்றும் ஆடை (PM MITRA) பூங்கா அமைக்கும் திட்டத்திற்கு மத்தியப் பிரதேசம் அதிகாரப்பூர்வ ஒப்புதலைப் பெற்றுள்ளது.
  - இந்தியாவின் இம்மாதிரியான முதலாவது பூங்காவாக இது கருதப் படுகிறது.
- சத்தீஸ்கரின் ராய்ப்பூர் எய்ம்ஸ் மருத்துவமனையானது தனது முதல் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது என்ற நிலையில் இது சிறுநீரக இணை மாற்று அறுவை சிகிச்சை என்றும் அழைக்கப்படுகிறது.
- கோஸ்டாரிகன் தேசிய அவசர ஆணையம் (CNE) ஆனது, போவாஸ் எரிமலை தேசியப் பூங்கா பகுதியில் வெடிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதை அடுத்து அபாய (சிவப்பு) எச்சரிக்கையை விடுத்துள்ளது.
- பிரான்சு அரசினால் நடத்தப்பட்ட வளர்ச்சிக்கான ஊட்டச்சத்து (N4G) உச்சி மாநாட்டில், 8 முக்கிய துறைகளில் 13 இலட்சிய மிகு உறுதிப்பாடுகளை உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.
- சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மீது விதிக்கப்படும் 18% சரக்கு மற்றும் சேவை வரியினை தமிழ்நாடு மாநில அரசே செலுத்த உள்ளது.
  - இத்திட்டத்திற்கு நாட்டிலேயே தமிழ்நாட்டில் அதிக நிதியானது ஒதுக்கீடு செய்யப் படுவதோடு ஒவ்வொரு தொகுதிக்கும் ஆண்டிற்கு என்று 3 கோடி ரூபாய் வழங்கப் படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## வலுக்கட்டாய கடன் வசூல்

- கடனை திரும்பப் பெறுவதற்கான கடன் வழங்கீட்டு நிறுவனங்களின் வற்புறுத்தல் நடவடிக்கைகளிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் ஒரு மசோதாவை தமிழக அரசானது அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த மசோதாவிற்கு 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் வழங்கீட்டு நிறுவனங்கள் (வலுக்கட்டாய கடன் வசூலிப்பு மீதான நடவடிக்கைகளைத் தடுக்கும்) மசோதா என்று பெயரிடப் பட்டுள்ளது.
- கடன் வாங்குபவரை அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களை மிரட்டுவது, தொல்லை கொடுத்தல் அல்லது வன்முறையைப் பயன்படுத்துதல், அக்கடன் வாங்குபவருக்குச் சொந்தமான அல்லது அவரால் பயன்படுத்தப்படும் எந்தவொரு சொத்திலும் இவர்கள் தலையிடுவது ஆகியவை குற்றமாக கருதப்படும் விளக்கத்தின் ஒரு பகுதியாகும்.

- இதில் குறிப்பிட்ட சில குற்றங்களுக்கான தண்டனைகளில் மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அடங்கும் என்பதோடு இது ஐந்து ஆண்டுகள் வரையில் நீட்டிக்கப் படலாம் அல்லது ஐந்து லட்சம் வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

**வலுக்கட்டாய கடன் வசூல் - தமிழ்நாட்டில் புதிய சட்டம்!**

- கடனை வலுக்கட்டாயமாக வசூலித்தால் 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை. பிணையில் வெளிவர முடியாது.
- வலுக்கட்டாய கடன் வசூலால், கடன் பெற்றவர்கள் தற்கொலை செய்து கொண்டால் கடனை வழங்கிய நிறுவனம் தற்கொலைக்கு தூண்டியதாக கருதப்படும்.
- கடன் பெற்றவரையோ அவரது குடும்பத்தினரையோ நிறுவனங்கள் மிரட்டவோ, பின் தொடரவோ, அவர்களது சொத்துக்களை பறிக்கவோ கூடாது.
- கடன் பெறுவோருக்கும் கடன் வழங்கும் நிறுவனத்திற்கும் இடையே உள்ள பூசல்களை தீர்த்து வைக்க குறை தீர்ப்பாயரை அரசு நியமிக்கலாம்

## உறுதுணை கடன் திட்டம்

- தமிழ்நாடு மாநில அரசானது, சுமார் 25 கோடி ரூபாய் மதிப்புள்ள சிறு மற்றும் குறு கடன்களை மிக குறைவான வட்டி விகிதத்தில் வழங்குவதற்காக வேண்டி உறுதுணை திட்டத்தினைச் செயல்படுத்த உள்ளது.
- இது தேசிய நிதியியல் மேம்பாட்டு நிதி மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினச் சமூகங்களைச் சேர்ந்த சிறு சில்லறை விற்பனையாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்கள், கூட்டுறவு வங்கிகள் மூலம் மாநில அரசின் மானியத்துடன் வழங்கப்படும்.




## முன்னாள் MLA/MLCகளின் மாதாந்திர மற்றும் குடும்ப ஓய்வூதியங்கள்

- முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் (MLA) மற்றும் சட்ட மேலவை உறுப்பினர்களின்

(MLC) மாதாந்திர மற்றும் குடும்ப ஓய்வூதியங்களை அதிகரிப்பதாக தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

- சட்டமன்ற உறுப்பினர்களின் மாதாந்திர ஓய்வூதியம் ஆனது, 30,000 ரூபாயிலிருந்து 35,000 ரூபாயாக உயர்த்தப்படும்.
- இது 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் செயல்படுத்தப்படும்.
- இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்ட மேலவை உறுப்பினர்களின் குடும்ப ஓய்வூதியம் ஆனது 15,000 ரூபாயிலிருந்து 17,500 ரூபாயாக உயர்த்தப்படும்.
- முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்ட மேலவை உறுப்பினர்களுக்கான மருத்துவ உதவித் தொகையானது 75,000 ரூபாய்க்குப் பதிலாக 1 லட்சம் ரூபாயாக வழங்கப் படும்.




## உயிரி மருத்துவக் கழிவுகளைக் கொட்டுவதைத் தடுக்கும் சட்டம்




- 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டவிரோதமாக பொருள் விற்பனை செய்வோர், இணைய வெளிக் குற்றம் சார் சட்டக் குற்றவாளிகள், போதைப்பொருள் கடத்தும் குற்றவாளிகள், வனப் பொருட்கள் கடத்தல் குற்றவாளிகள், குண்டர்கள், மோசமான கடத்தல் குற்றவாளிகள், மணல் கடத்தல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசைப் பகுதிகளை ஆக்கிரமிப்பவர்கள் மற்றும் திரைப்படத்தின் மீது திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் ஆகியோரின் சட்ட விரோதச் செயல்களைத் தடுக்கும் சட்டத்தினைத் திருத்தியமைப்பதற்கான மசோதாவினை தமிழ்நாடு அரசு மாநிலச் சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியத் தண்டனைச் சட்டம், 1860, மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டம், 1973 ஆகியவை ரத்து செய்யப்பட்டு, முறையே பாரதிய நியாய சன்ஹிதா, 2023 மற்றும்

பாரதிய நாகரிக சுரக்சா சன்ஹிதா, 2023 என்பதாக மீண்டும் அவை இயற்றப் பட்டதாகவும் இந்த மசோதா கூறுகிறது.

- எனவே, சில பின்விளைவினை ஏற்படுத்தும் திருத்தங்களை 1982 ஆம் ஆண்டின் 14வது சட்டமான தமிழ்நாடு சட்டம் என்ற சட்டத்தில் மேற்கொள்ள வேண்டும்.
- உயிரி மருத்துவக் கழிவு தொடர்பான குற்றவாளிகள் மீது 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு தடுப்புச் சட்டத்தின் திருத்த மசோதாவின்படி, குண்டர்கள் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப் படும்.

## 2024/25 ஆம் ஆண்டில் சென்னை IIT நிறுவனத்தின் காப்புரிமைகள்




- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, 2024-25 ஆம் ஆண்டில் 417 காப்புரிமைகளைத் தாக்கல் செய்துள்ளது என்ற ஒரு நிலையில் இதில் 298 இந்தியக் காப்புரிமைகளும், 119 சர்வதேச காப்புரிமைகளும் அடங்கும்.
- இந்த நிறுவனம் ஆனது 39 வடிவமைப்புகள், ஆறு காப்புரிமைகள் மற்றும் ஒரு வர்த்தக முத்திரையைத் தாக்கல் செய்துள்ளது என்ற நிலையில் இதன் மூலம் மொத்த அறிவு சார் சொத்துத் தாக்கல்களின் எண்ணிக்கை 463 ஆக உயர்ந்துள்ளது.
- கடந்த ஐந்து ஆண்டுகளில், இந்த நிறுவனம் ஆனது சுமார் 28 கோடி ரூபாய் மதிப்புள்ள 50க்கும் மேற்பட்ட உரிம ஒப்பந்தங்கள் மூலம் வளர்ந்து வரும் அதிகத் தாக்கங்களை ஏற்படுத்தும் தொழில்நுட்பங்களை உருவாக்கி பல தொழில்துறைக் கூட்டாளர்களுக்கு பரிமாற்றியுள்ளது.
- கடந்த ஐந்து ஆண்டுகளில், இந்த நிறுவனத்தின் தொழில்நுட்பப் பரிமாற்ற அலுவலகம் (TTO) ஆனது உரிம வழங்கீட்டு வருவாயை இரட்டிப்பாக்கியுள்ளது மற்றும் உரிமம் பெற்ற அறிவுசார் சொத்துக்களின் எண்ணிக்கையை மூன்று மடங்காக உயர்த்தி உள்ளது.

# தேசியச் செய்திகள்

## GST மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கான புதிய விதிகள்

- இந்திய அரசாங்கம் ஆனது, சரக்கு மற்றும் சேவை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாய (செயல்முறை) விதிகளை அறிவித்துள்ளது.
- இனி விண்ணப்பங்களைக் கட்டாயமாக இணைய வழியில் தாக்கல் செய்வதற்கும்,

கலப்பு முறையில் விசாரணைகளை நடத்துவதற்கும் இது வழி வகை செய்கிறது.

- விண்ணப்பதாரர் நண்பகல் 12:00 மணிக்கு முன் தாக்கல் செய்யும் எந்தவொரு அவசர விவகாரமும், அந்த விண்ணப்பம் ஆனது அனைத்து வகையிலும் முழுமையானதாக இருந்தால், அதற்கு அடுத்த வேலை நாளில் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் முன் விசாரணைக்காகப் பட்டியலிடப்படும் என்றும் இந்த விதிகள் கூறுகின்றன.
- விதிவிலக்கான சில சூழல்களில், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் அல்லது தலைவரின் குறிப்பிட்ட ஒரு அனுமதியுடன், அது மறுநாள் பட்டியலிடப்படுவதற்காக, மதியம் 12:00 மணிக்குப் பிறகு ஆனால் பிற்பகல் 3:00 மணிக்கு முன் விண்ணப்பத்தைப் பெறலாம்.
- 2025 ஆம் ஆண்டின் சரக்கு மற்றும் சேவை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாய விதிகளின் படி (நடைமுறை), மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் நிர்வாக அலுவலகங்கள் இனி அனைத்து வேலை நாட்களிலும் திறந்திருக்கும்.
- கடந்த ஆண்டு மே மாதத்தில், சரக்கு மற்றும் சேவை வரிக்கான மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (GSTAT) முதல் தலைவராக நீதிபதி (ஓய்வு) சஞ்சய குமார் மிஸ்ராவை அரசாங்கம் நியமித்தது.




## உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட HPV பரிசோதனைக் கருவிகள்




- இந்திய நாடானது, கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பரிசோதனைக்காக வேண்டி உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட HPV சோதனை கருவிகளை அறிமுகப் படுத்தி

உள்ளது.

- இந்த முக்கியமான அறிமுகமானது, "இந்தியாவில் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பரிசோதனைக்கான உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) சோதனைகளைச் சரிபார்த்தல்" என்ற தேசியத் திட்டத்தின் ஒரு உச்ச நிலையைக் குறிக்கிறது.
- கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் ஆனது, இந்தியப் பெண்களிடையே மிக அதிகளவில் நிலவும் இரண்டாவது மிகவும் பொதுவான புற்றுநோயாக உள்ளது என்பதோடு மேலும் இந்தியா உலகளாவிய புற்றுநோய்ப் பாதிப்புகளில் அதிகப் பங்கினைக் கொண்டதாக உள்ளது.
- கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயால் ஏற்படும் உலகளாவிய உயிரிழப்புகளில் சுமார் 25% இந்தியாவில் பதிவாகிறது.
- உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பரிசோதனைக் கருவிகள் தேசிய சுகாதாரத் திட்டங்கள் மூலம் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்தியாவில் குளோரிபைரிஃபோஸ் பயன்பாடு




- பேசல், ரோட்டர்டாம் மற்றும் ஸ்டாக்ஹோம் உடன்படிக்கைகளுக்கான (BRS COP) பங்கு தாரர்களின் மாநாடு ஆனது ஜெனீவா நகரில் நடத்தப் பட்டது.
- ஸ்டாக்ஹோம் உடன்படிக்கையின் மீதான தரப்பினரை உலகளாவியப் பயன்பாட்டுத் தடைக்கு அழைப்பு விடுக்கச் செய்யும் A என்ற முக்கியப் பின்ணிணைப்பின் கீழ் குளோரிபைரிஃபோக்களைப் பட்டியலிடுமாறு இந்தியா வலியுறுத்தியது.
- குளோரிபைரிஃபோஸ் என்பது, சுமார் 40க்கும் மேற்பட்ட நாடுகளில் பயன்பாட்டிற்குத் தடைகள் இருந்த போதிலும், இந்தியாவில் இன்னும் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஒரு நச்சுத் தன்மை வாய்ந்த பூச்சிக்கொல்லியாகும்.
- இது உலக சுகாதார அமைப்பினால் 'மிதமான ஒரு ஆபத்து கொண்டது' என வகைப் படுத்தப் பட்டுள்ளது.

- இது இந்தியாவில் பல்வேறு பயிர்களில் தொடர்ந்து பயன்படுத்தப் படுவதால், இது விவசாயிகள், நுகர்வோர், எதிர்காலச் சந்ததியினர் மற்றும் சுற்றுச்சூழல்களுக்கு மிக கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.
- 2001 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஸ்டாக்ஹோம் உடன்படிக்கையானது, கரிம மாசுபடுத்திகளின் தொடர்ச்சியான பயன்பாட்டினை நீக்குவதை அல்லது மிக நன்கு கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## பாண்டுங் மாநாட்டின் 70 ஆம் ஆண்டு நிறைவு





- இந்த ஆண்டு ஆனது 1955 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 முதல் 24 ஆம் தேதி வரையில் இந்தோனேசியாவின் பாண்டுங் நகரில் நடைபெற்ற முதல் ஆசிய-ஆப்பிரிக்க உச்சி மாநாட்டின் 70 ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளின் சுமார் 29 அரசாங்கங்களின் பிரதிநிதிகள் இந்தோனேசியாவின் பாண்டுங் நகரில் கூடியிருந்தனர்.
- அவர்கள் அமைதி மற்றும் பனிப்போர், பொருளாதார வளர்ச்சி மற்றும் காலனித்துவ நீக்கத்தில் வளர்ந்து வரும் நாடுகளின் பங்கு குறித்து விவாதித்தனர்.
- இதற்கு இந்தோனேசியா, மியான்மர், இலங்கை, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் துணைப் பங்காளர்களாக இருந்தன.
- இந்த மாநாடு மற்றும் அதன் இறுதித் தீர்மானம் ஆனது பனிப்போரின் போதான அணி சேரா இயக்கத்திற்கான அடித்தளத்தினை அமைத்தன.
- அணிசேரா இயக்கமானது சோவியத் ஒன்றியத்திற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் ஆன பனிப்போரின் பின்னணியில் 1961 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- அணிசேரா இயக்கத்திற்கு முறையான ஸ்தாபன சாசனம் அல்லது ஒப்பந்தம் இல்லை, மேலும் அதற்கு நிரந்தரச் செயலகமும் இல்லை.

## சாண்டியாகோ வலையமைப்பு


- ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்டம் (UNDP) ஆனது, சாண்டியாகோ வலை அமைப்பில் இணைந்துள்ளது.

- இது எளிதில் பாதிக்கப்படக்கூடிய நாடுகள் மற்றும் சமூகங்கள் காலநிலை மற்றும் பருவ நிலை மாற்றத்தினால் ஏற்படும் இழப்பு மற்றும் சேதத்தின் மீளமுடியாதப் பல தாக்கங்களை எதிர்கொள்ள உதவுவதற்காக வேண்டி அர்ப்பணிக்கப்பட்ட தொழில் நுட்ப நிபுணர்கள் மற்றும் அமைப்புகளை இணைக்கும் ஓர் உலகளாவிய முன்னெடுப்பு ஆகும்.
- இதன் செயலகம் ஆனது, ஐக்கிய நாடுகள் சபையின் பேரிடர் அபாயக் குறைப்பு அலுவலகம் (UNDRR) மற்றும் ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் திட்டச் சேவைகளுக்கான அலுவலகம் (UNOPS) ஆகியவற்றால் இணைந்து நன்கு நிர்வாகிக்கப் படுகிறது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகின் பழங்குடியின மக்களின் நிலை குறித்த அறிக்கை 2025





- ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக விவகாரத் துறை (UN-DESA) ஆனது, சமீபத்தில் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- பழங்குடியின மக்கள் சர்வதேசப் பருவநிலை நிதியில் 1 சதவீதத்திற்கும் குறைவாகவே பெறுகிறார்கள் என்பதோடு பருவநிலைத் தீர்வுகளிலிருந்துப் பெரும்பாலும் விலக்கப் படுகிறார்கள்.

- உலக மக்கள்தொகையில் சுமார் 6% மட்டுமே உள்ள அவர்கள் புவியின் மீதமுள்ளப் பல்லுயிர்ப் பெருக்கத்தில் 80 சதவீதப் பகுதியினைப் பாதுகாக்கின்றனர்.
- வளங்களைக் குறைவிற்கு உட்படுத்தாமல் பூமியை மிகவும் நன்கு பராமரிக்கும் உள் நாட்டுப் பாரம்பரிய வேளாண் நடைமுறைகளுடன், நிலங்கள், பிரதேசங்கள் மற்றும் வளங்களின் பாரம்பரியப் பயன்பாடு மற்றும் மேலாண்மைக்கான ஆதாரமாகவும் அவர்கள் உள்ளனர்.

# முக்கிய தினங்கள்

## தேசியக் குடிமைப் பணிகள் தினம் 2025 - ஏப்ரல் 21





- இத்தினமானது, இந்திய நாட்டின் நிர்வாக அமைப்பின் ஒரு முதுகெலும்பாக விளங்கும் அரசுப் பணியில் ஈடுபட்டுள்ள குடிமைப் பணியாளர்களின் மகத்தான முயற்சிகளை அங்கீகரிப்பதற்காக கொண்டாடப்படுகிறது.
- இந்தத் தேசிய அளவிலான அனுசரிப்பு ஆனது முதன்முதலில் 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.
- 1947 ஆம் ஆண்டில் இந்தத் தினத்தில் தான் சுதந்திர இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் படேல் டெல்லியில் உள்ள மெட்கால்ஃப் ஹவுஸில் தகுதிகாண் நிர்வாக அதிகாரிகளுடன் உரையாற்றினார்.
- அவர் குடிமைப் பணியாளர்களை "இந்தியாவின் எஃகு சட்டகம்" என்று குறிப்பிட்டார்.
- கார்ன்வாலிஸ் பிரபு 'இந்தியக் குடிமைப் பணிகளின் தந்தை' என்று அழைக்கப் படுகிறார்.
- 1793 ஆம் ஆண்டு சாசனச் சட்டம் ஆனது பிரித்தானியர்கள் ஆதிக்கம் வகித்த குடிமைப் பணிகளை நிறுவியது.
- வெல்லஸ்லி பிரபு, குடிமைப் பணி ஆட்சேர்ப்புப் பணிகளுக்காக இளைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக 1800 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் வில்லியம் கோட்டை கல்லூரியை நிறுவினார்.
- 1853 ஆம் ஆண்டு சாசனச் சட்டம் ஆனது, அரசுப் பணிகளில் நிலவி வந்த அரசியல் கட்சிப் பின்னணி சார்பான நியமன அமைப்பு முறையை நீக்கி, அனைவருக்குமானப் போட்டித் தேர்வுகளை அறிமுகப்படுத்தியது.
- குடிமைப் பணிகள் ஆணையமானது 1854 ஆம் ஆண்டில் இலண்டனில் நிறுவப்பட்டது.


- மெக்காலே பிரபுவின் 1856 ஆம் ஆண்டு அறிக்கையானது தகுதி அடிப்படையிலான குடிமைப் பணியினை அறிமுகப்படுத்தியது.
- 1922 ஆம் ஆண்டு முதல், ICS தேர்வுகள் இந்தியாவில் முதன்முதலாக அலகாபாத்தில் நடத்தப்படத் தொடங்கின.
- 1926 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதியன்று அரசுப் பணியாளர் ஆணையம் இந்தியாவில் நிறுவப்பட்டது.

## உலகப் புவி தினம் 2025 - ஏப்ரல் 22

- இந்தத் தினமானது, கடந்த 53 ஆண்டுகளாக பல்வேறு கொள்கை வகுப்பாளர்கள், ஆர்வலர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் முந்தைய இலக்குகளில் ஆற்றியச் சாதனைகளை கௌரவிக்கும் விதமாக அனுசரிக்கப்பட்டது.
- முதல் புவி தினம் ஆனது 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் தேதியன்று அனுசரிக்கப் பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Our Power, Our Planet" என்பதாகும்.




## உலகப் புத்தகம் மற்றும் பதிப்புரிமை தினம் 2025 - ஏப்ரல் 23




- இத்தினமானது மக்களிடையே வாசிப்பு மற்றும் எழுதுவது தொடர்பான ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில் உலகளவில் அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது, இலக்கியம் மற்றும் அது சார்ந்தப் படைப்பாளிகளை மிகவும் நன்கு கொண்டாடுவதற்காக யுனெஸ்கோ அமைப்பினால் தேர்ந்தெடுக்கப்பட்டது.

- இத்தினம் ஆனது வில்லியம் ஷேக்ஸ்பியர், மிகுவல் டி செர்வாண்டஸ் மற்றும் இன்கா கார்சிலாசோ டி லா வேகா ஆகியோர் உள்ளிட்ட பல இலக்கிய ஜாம்பவான்களின் பிறந்த நாளுடன் ஒன்றி வருகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "The role of literature in achieving the Sustainable Development Goals (SDGs)" என்பதாகும்.

## ஐக்கிய நாடுகள் சபையின் ஸ்பானிய மொழி தினம் 2025 - ஏப்ரல் 23





- இத்தினமானது, ஸ்பானிய மொழியின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் அதிகாரப்பூர்வ மொழியாகப் பயன்படுத்துதல் பற்றிய ஒரு பெரும் விழிப்புணர்வை உலக மக்களுக்கு ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஸ்பானிய மொழியில் மிகப் புகழ்பெற்ற எழுத்தாளரான மிகுவல் டி செர்வாண்டஸ் சாவேத்ராவைக் கௌரவிக்கும் விதமாக அனுசரிக்கப்படுகிறது.
- ஸ்பானிய மொழியானது ஸ்பெயின் நாட்டில் உருவானது.
- தற்போது, உலகில் 450 மில்லியனுக்கும் அதிகமான ஸ்பானிய மொழி பேசும் மக்கள் உள்ளனர்.
- சீன மொழிக்கு அடுத்தபடியாக, உலகில் அதிகம் பேசப்படும் மொழியாக ஸ்பானிய மொழி உள்ளது.
- ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு மொழிக்கு அடுத்தபடியாக, உலகில் அதிகம் படிக்கப்படும் மூன்றாவது மொழியாக ஸ்பானிய மொழி உள்ளது.
- உலகில் சுமார் 75 மில்லியன் மக்கள் ஸ்பானிய மொழியை இரண்டாம் மொழியாகப் பேசுகின்றனர்.

## தேசியப் பஞ்சாயத்து தினம் 2025 - ஏப்ரல் 24

- இது கடைநிலை ஜனநாயகக் கட்டமைப்பின் மிகப் பெரும் முக்கியத்துவத்தினைக் கொண்டாடுவதோடு, உள்ளாட்சி நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் கிராமப்புறச் சமூகங்களை மேம்படுத்த உதவுகிறது.
- இந்த ஆண்டானது, 1992 ஆம் ஆண்டு 73வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் இயற்றப்

பட்டதன் முப்பத்தி இரண்டாவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

- 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் தேதியன்று அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வந்த இத்திருத்தச் சட்டமானது பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்கு (PRIs) அரசியலமைப்பு அந்தஸ்தினை வழங்கியது.
- பஞ்சாயத்து ராஜ் திவாஸ் என்றும் அழைக்கப்படுகின்ற முதல் தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினமானது 2010 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது.




## சர்வதேச ICT துறையில் பெண்கள் தினம் 2025 - ஏப்ரல் 24




- ஏப்ரல் மாதத்தின் நான்காவது வியாழக்கிழமையன்று சர்வதேச ICT துறையில் பெண்கள் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தத் தினமானது தகவல் மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்பத்தில் (ICT) பணி வாய்ப்புகளைப் பெறுவதற்குப் பெண்களை ஊக்குவிக்கும் வகையில் கொண்டாடப் படுகிறது.


- இது அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆகிய பல்வேறு துறைகளையும் ஆராய்கிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Girls in ICT for inclusive digital transformation" என்பதாகும்.

## உலக ஆய்வக விலங்குகள் தினம் 2025 - ஏப்ரல் 24




- இந்தத் தினமானது, உலகெங்கிலும் உள்ள ஆய்வகங்களில், விலங்குகள் பெருமளவில் எதிர்கொள்ளும் பாதிப்புகள் மற்றும் விலங்குகள் கொல்லப்படுவது குறித்துப் பெரும் கவனத்தினை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பல ஆண்டுகளாக அழகியல், மருத்துவம், விமானப் போக்குவரத்து மற்றும் இராணுவத் தொழில்துறைகளில் கூட விலங்குகள் பரிசோதனைக்காகப் பயன்படுத்தப்படுகிறது.
- 1875 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அறிவியல் ஆய்விற்காக உயிருள்ள விலங்குகளைப் பயன்படுத்துவதற்கு எதிரான தேசியச் சங்கமானது (NAVS) விலங்குகள் மீதானப் பரிசோதனைகளுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யும் உலகின் முதல் அமைப்பாகும்.
- 1979 ஆம் ஆண்டு NAVS ஆனது உலக ஆய்வக விலங்குகள் தினத்தினை நிறுவியது (ஆய்வக விலங்கு தினம் என்றும் குறிப்பிடப்படுகிறது).

## உலக நோய்த்தடுப்பு / தடுப்பூசி வாரம் 2025




- இது ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதத்தின் கடைசி வாரத்தில் 24 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை கொண்டாடப்படுகிறது.

- உலக நோய்த் தடுப்பு வாரம் என்ற வாரமானது 2012 ஆம் ஆண்டு மே மாதத்தில் உலக சுகாதார அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Immunization for All is Humanly Possible" என்பதாகும்.

## 2025 ஏப்ரல் – சில முக்கிய தினங்கள்




- பல்வேறு உலகளாவியச் சவால்களை எதிர்கொள்வதிலும், நீடித்த மற்றும் நிலையான மேம்பாட்டினை அடைவதிலும் பெரும் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத்தின் பங்கை வெளிக் கொணர்வதற்காக என்று ஆண்டுதோறும் ஏப்ரல் 21 ஆம் தேதியன்று உலகப் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க தினம் கொண்டாடப்படுகிறது.
- ஷேக்ஸ்பியரின் பிறந்த மற்றும் மறைந்த நாளைக் குறிக்கும் வகையிலும், மொழி மற்றும் நவீன ஆங்கில மொழியை உருவாக்குவதில் அவரது பங்களிப்பைக் குறிக்கும் வகையிலும் ஆண்டுதோறும் ஏப்ரல் 23 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபையின் ஆங்கில மொழி தினம் அனுசரிக்கப்படுகிறது.
- பல மோதல்களுக்கு அமைதியின் வழியாக தீர்வு காணுதல் கொள்கையின் மீதான உறுதிப்பாடு மற்றும் பலதரப்பு நாடுகளின் முடிவெடுத்தல் மற்றும் அரசுமுறைச் செயல்பாடுகளின் முக்கியத்துவம் ஆகியவற்றினைக் குறிக்கும் வகையில், சர்வதேச அமைதிக்கான பலதரப்பு மற்றும் அரசுமுறை உறவுகளுக்கான தினம் ஏப்ரல் 24 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.
- நல்வாழ்வு மற்றும் பிறர் மீதான கருணையைப் பரப்பும் அதே வேளையில், நமது உடல் மற்றும் மனதின் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக என, ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதத்தின் கடைசி சனிக்கிழமையன்று (ஏப்ரல் 26/2025) உலக குணப்படுத்தும் தினம் அனுசரிக்கப்படுகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★